# விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**மூ.மு.எண். 3576 / அ3 / 2022 நாள். .05.2022**

பொருள்- பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை - ஆனத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஜெ.தினேஷ் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் -சார்பாக

பார்வை- 1) அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி (பட்ஜெட்-1) துறை நாள்- 18.05.2018

2) சென்னை-3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம் எண்.2563/PSD-I2/2020, நாள்- 21.07.2020.

3) விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 5975/அ3/2020 நாள்-17.09.2020.

4) ஆனத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியரின் கடிதம் ந.க.எண் .46/2021-22 நாள்- 09.04.2022.

******

பார்வை 02-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV -ன் கீழ் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 03-ல் காணும் விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதின் அடிப்படையில் 21.09.2020 முற்பகல் முதல் ஆனத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ஜெ.தினேஷ் என்பாருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு பணிவரன் முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியாளர் பெயர் | : | திரு.ஜெ.தினேஷ், |
| 2. | பதவி | : | இளநிலை உதவியாளர் |
| 3. | பணிபுரியும் பள்ளி | : | அரசு மேல் நிலைப் பள்ளி, ஆனத்தூர் |
| 4. | பிறந்த தேதி | : | 01.11.1994 |
| 5. | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | : | 21.09.2020 முற்பகல் |
| 6. | நியமன முறை | : | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் (TNPSC - Group-IV) |
| 7. | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்படும் நாள் | : | 21.09.2020 முற்பகல் |
| 8. | தகுதி காண்பருவத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் | : | மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு நிறைவான பணிக்காலம் |

மேலும் இவருக்கு பணிவரன் முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவக் காலத்திற்குள், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானிசாகர் இளநிலை உதவியாளருக்கான அடிப்படைப் பயிற்சியிலும் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

தகுதிகாண்பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பின்னர் தான் இரண்டாவது பருவக்கால ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

இவருக்கு தற்போது பணிவரன்முறை செய்யப்படுவது இளநிலை உதவியாளர் பதவியில் முன்னுரிமையாக அமையாது என்றும், மாநில முன்னுரிமைப் பட்டியலின்படியே இவரது முன்னுரிமை அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான விவரங்களை சம்பந்தப்பட்டவரது பணிப்பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படுவதுடன் அன்னாரது பணிப்பதிவேடு ஒரு தொகுதி (1) இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது-

இணைப்பு- அசல்பணிப்பதிவேடு – 1 தொகுப்பு.

முதன்மைக்கல்வி அலுவலர்

விழுப்புரம்.

பெறுநர்- திரு.ஜெ.தினேஷ்,

இளநிலை உதவியாளர்

அரசு மேல்நிலைப் பள்ளி, ஆனத்தூர். (உரிய வழியாக)

நகல்- அரசு மேல்நிலைப் பள்ளி, ஆனத்தூர்.